2018 ஜனவரி 9]

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவைப் பொறுத்தவரையில், பேருந்து நிலையத்தைச் சீரமைப்பது குறித்த கேள்வி. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் நகராட்சிக் கட்டடத்தைப் பற்றிப் பேசினார். அவர் குறிப்பிட்ட இடத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மூலம் பூமி பூஜை போட்டிருப்பதால், கண்டிப்பாக கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. வெற்றிவேல், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***6227—திரு. ச. வெற்றிவேல்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, ஓமலூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, ஓமலூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. வெற்றிவேல் அவர்கள்.*

[2018 ஜனவரி 9

திரு. ச. வெற்றிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். உயர் கல்வித் துறையை தன் கண் இமைபோல் காத்து வரும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள், வருங்காலத்திலாவது இந்தத் தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு அருகில் 14 கி.மீ. தொலைவில் இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. அதேபோல், அரசு உதவிபெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 18 கி.மீ. தொலைவில் ஒரு கல்லூரியும், 16 கி.மீ. தொலைவில் ஒரு கல்லூரியும் இருக்கின்றன. அங்கு, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் 2 இருக்கின்றன. ஆக, ஒட்டுமொத்தமாக 6 கல்லூரிகள் அந்தச் சட்டமன்றத் தொகுதிக்கு அருகில் இருக்கின்ற காரணத்தினால், ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் முழுமையாக பூர்த்தியாகாமல் இருக்கின்ற நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, வரக்கூடிய காலகட்டங்களில், இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. வெற்றிவேல் அவர்கள்.

திரு. ச. வெற்றிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்

2018 ஜனவரி 9]
என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி தொகுதியில் நீண்ட நாட்களாக ஒரு கலைக் கல்லூரி வேண்டுமென்று நாங்கள் சொல்லி வருகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு அதைச் செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். இந்த ஆண்டு நிச்சயமாக பெண்களுக்கான கலைக் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருமே கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆங்காங்கே தேவை என்ற கோரிக்கையை எழுப்பிக்கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 5 ஆண்டுக் காலத்திலே 65 புதிய கல்லூரிகளைத் தோற்றுவித்தார்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி) *அதற்கு அடுத்த கட்டமாக, இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், இந்த ஆண்டு புதியதாக 8 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், புதியதாக 3 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளையும் தோற்றுவித்து,* (மேசையைத் தட்டும் ஒலி) *தமிழகத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை நிரூபிக்கின்ற வகையில் உயர் கல்வித் துறையிலே திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை நிரூபிக்கின்ற வகையில், மத்திய அரசின் M.H.R.D. தனது 2016–2017 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அதில், உயர் கல்வியிலே இந்திய அளவில் 25.2 சதவீதம் மாணவர்கள் சேர்க்கை இருந்தாலும்கூட, தமிழகம் முதலிடத்தைப் பெற்று சேர்க்கை விகிதம் 46.9 சதவீதமாக உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

[2018 ஜனவரி 9

முற்பகல் 10–40

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில், கூடுதலாக மாணவர்கள் சேர்க்கை சதவீதம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அதன் அடிப்படையிலே, அரசுக் கல்லூரியிலே அனுமதிக்கப்பட்ட இடங்களுக்கும் கூடுதலாக 20% மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள இந்த ஆண்டு அனுமதி வழங்கப்பட்டு, அந்தக் கல்லூரியிலே மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றது. எனினும், வருகின்ற காலக் கட்டங்களிலே அங்கே ஒரு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தேவை என்பதைத் தொடர்ந்து அவர்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் அரசு இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நிரூபிக்கின்ற வகையிலே, வரக்கூடிய காலக்கட்டங்களில் அந்தக் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைக் கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியில், குள்ளஞ்சாவடி நகரத்தில் ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கப்பட வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கடலூர் மாவட்டத்தில், கடலூரில் ஓர் அரசுக் கல்லூரியும், விருத்தாசலத்தில் ஓர் அரசுக் கல்லூரியும், சிதம்பரத்தில் ஓர் அரசுக் கல்லூரியும் இருக்கின்றன. குறிஞ்சிப்பாடி தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி இல்லை. அங்கு புதிய கலைக் கல்லூரியைத் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தங்குதடையின்றி உயர் கல்வியைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, எங்கெங்கு மாணவர்களுடைய சேர்க்கை கூடுதலாக இருக்கின்றதோ, அங்கெல்லாம் புதிய கல்லூரியைத் தொடங்குகின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது நடவடிக்கை*

2018 ஜனவரி 9]

எடுத்து வருகிறது. இந்தக் கல்வி ஆண்டில்கூட மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கக்கூடிய கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் புதிதாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வரக்கூடிய காலக்கட்டங்களில் தேவைக்கேற்ப மாணவர்களுக்கு உயர் கல்வி தருகின்ற வகையிலே அரசானது முனைப்போடு செயல்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

5—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***4283—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, பணகுடியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோரையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், பணகுடி பேரூராட்சியில் இயங்கிவரும் பணகுடி வடக்கு மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு 11–1–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட உள்ளது. விரைவில் அங்கு கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.